தினமலர் - 24.02.2023

# உள்கட்டமைப்பில்லா இன்ஜி., கல்லூரிகள் அங்கீகாரத்தை நிறுத்த பல்கலை திட்டம்

சென்னை, பிப். 24– 'உள்கட்டமைப்பு குறைவாக உள்ள, தரம் குறைந்த இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு, வரும் கல்வியாண்டில் அங்கீகாரம் தர வேண்டாம்' என, ஏ.ஐ.சி.டி.இ.,க்கு பரிந்துரைக்க, அண்ணா பல்கலை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில், அண்ணா பல்கலை இணைப்பில், 450க்கும் மேற்பட்ட இன்ஜினியரிங் கல்லூரிகள்; 50க்கும் மேற்பட்ட, 'ஆர்கிடெக்ட்' கல்லூரிகள் மற்றும் எம்.பி.ஏ., மற்றும் எம்.சி.ஏ., படிப்புகளை நடத்தும் மேலாண்மை கல்லூரிகள் செயல்படுகின்றன.

இந்தக் கல்லூரிகளில் ஆண்டுதோறும், கவுன்சிலிங் வாயிலாக மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. கவுன்சிலிங்குக்கு முன், ஏ.ஐ.சி.டி.இ., எனப்படும், அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் சார்பில், அங்கீகாரம் வழங்கப்படும்.

அதன்பின், அண்ணா பல்கலை வழியே, 'அப்ளியேஷன்' என்ற இணைப்பு அந்தஸ்து வழங்கப்படும். இந்த இரண்டு சான்றுகளையும் பெற்றால் மட்டுமே, கல்லூரிகளால் மாணவர் சேர்க்கையை நடத்த முடியும்.

இந்நிலையில், தமிழகத்தில் சில இன்ஜினியரிங் கல்லூரிகள், ஏ.ஐ.சி.டி.இ.,யின் விதிகளை சரியாக பின்பற்றாமல், உள்கட்டமைப்பில் பல்வேறு குறைபாடுகளுடன் உள்ளன.

இந்தக் கல்லூரிகள், ஆண்டுதோறும் பல்வேறு காரணங்களை கூறி, மீண்டும் அங்கீகாரம் பெற்று, மாணவர் சேர்க்கையை நடத்துகின்றன.

இதனால், உள்கட்டமைப்பு குறைவான கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் கல்வித்தரம் குறைந்து, மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

எனவே, வரும் கல்வி ஆண்டில், மாணவர் சேர்க்கை கவுன்சிலிங்கை நடத்தும் முன், தரம் குறைந்த கல்லூரிகளுக்கு மீண்டும் அங்கீகாரம் வழங்காமல் இருக்குமாறு, ஏ.ஐ.சி.டி.இ.,க்கு பரிந்துரை செய்ய, அண்ணா பல்கலை முடிவு செய்துள்ளது.

அத்துடன், அங்கீகாரம் மற்றும் இணைப்பு அந்துஸ்துக்கு விண்ணப்பிக்கும் கல்லூரிகளில், தரமான கல்லூரிகளை விட்டு விட்டு, தரம் குறைந்த மற்றும் உள்கட்டமைப்பு பிரச்னை உள்ள கல்லூரிகளுக்கு மட்டும் ஆய்வுக்குழுவை அனுப்பவும், அண்ணா பல்கலை முடிவு செய்துள்ளதாக, உயர்கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.